පාර්ලිමේන්තු ප්‍රකාශණ මාලා අංක : 318

ආයතනයේ නම : ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 318

நிறுவனத்தின் பெயர் : இலங்கைப் பாராளுமன்றம்

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் சபா பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளையும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

Parliament Series No.: 318

Name of the Institution: Parliament of Sri Lanka

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

**பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அவதானிப்புகளைச் சமர்ப்பித்தல் மற்றும் நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் பிரகாரம் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு ஏற்புடையதாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்.**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492

நிறுவனத்தின் பெயர் : இலங்கைப் பாராளுமன்றம்

| | குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளைத் தவிர்ப்பதற்காக நிறுவனம் எடுத்துள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 01 | 2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பாகத்தின் 11.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள், நி.பி. 756 (6) இன் பிரகாரம் இருப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு, உரிய திகதியில் தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும், குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு பல்வேறு நடைமுறைச் சூழ்நிலைகள் காரணமாக இயலாமற்போயுள்ளது. இவ்விடயம் தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்களிலும் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், அங்கு எட்டப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய இக்காலப்பகுதியைக் குறைத்துக்கொள்வதற்காக 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்குரிய இருப்புக் கணக்கெடுப்பு அறிக்கைகள் 2026 மார்ச் 31 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. |
| 02 | வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகங்கள், பற்றாக்குறைகள் தொடர்பான பரிந்துரைகளும் ஏனைய பரிந்துரைகளும் உரிய காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளின் கணக்கெடுப்புக் குழுக்களின் பரிந்துரைகள் அனைத்தையும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்தி எனக்கு அறிக்கையிடுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. 2026 ஆம் ஆண்டு முதல் முழுமையாக 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்கு இணங்கியொழுக திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 03 | அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை வர்ணம் தீட்டப்பட்டிருக்கவில்லை. | பாராளுமன்ற ஒதுக்கத்துக்குச் சொந்தமான வாகனங்களில் செங்கோல் அடையாளத்தை பொறிப்பதற்காக சேவை வழங்குநர் ஒருவர் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அப்பணியை ஒரு வாரத்திற்குள் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. |
| 04 | நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த வெளிநாட்டு உதவிகள் சம்பந்தமாக 1994.04.20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்கு வெளிநாட்டு உதவியாகக் கிடைத்த அலுவலக உபகரணங்கள் உள்ளிட்ட சொத்துக்கள், தற்போது 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கில் பதியப்பட்டுள்ளன. |

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

KUSHANI ROHANADEERA
Secretary General of Parliament
Parliament of Sri Lanka
Sri Jayewardenepura – Kotte
SRI LANKA